REGD. NO. M.76511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 16உ புதன் (29—5—57) ★ வெளியூர்: வைகாசி 17உ வியாழன் (30—5—57) இதழ் [300

ரூ. 5·5 கோடி செலவில் புது மாளிகையாம்!

★

புதுடில்லி, மே 28—

தற்காப்பு இலாகாவிற்குத் தலைமை அலுவலகம் ஒன்று கட்டுவதற்காக ரூ. 5½ கோடி வரை செலவிடப் போவதாக சர்தார் சர்ஜித் சிங் மஜீரியா என்ற தற்காப்பு இலாகா உதவி மந்திரி மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாளிகையில் தற்காப்பு இலாகா மந்திரி சபை, முப்படைகளின் தலைமை அலுவலகம் இவை எல்லாம் இடம் பெறுமாம்!

'அகில இந்தியா'க்கள் மீண்டும் ஓர் முறை தலைகுனியட்டும்!

சேலம் மாக்னசைட் தொழிலை நடத்த சென்னை சர்க்காருக்கு அனுமதி இல்லை

வடநாட்டு முதலாளிக்கு தொழிலைத் தந்துவிடுமாறு டெல்லியின் ஆக்ஞை

தமிழ்நாட்டுத் 'தலையாட்டிகள்' செய்யப்போவதென்ன?

நியூ டெல்லி, மே 28—

'அகில இந்தியா'க்களை, மீண்டும் ஓர் முறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன் தலைகுனியவைக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதாகத் தெரிகிறது.

சேலத்தில் கிடைக்கும் 'மாக்னசெட்'டை தோண்டும் தொழில் ஒன்றைத் துவங்க தனக்கோ, அல்லது தனது மாநிலத்தில் உள்ள தனிப்பட்ட கம்பெனி ஒன்றுக்கோ அனுமதி தரவேண்டும் என்ற சென்னை மாநில சர்க்காரின் கோரிக்கையை டெல்லி சர்க்கார் ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

"சேலம் மாக்னசைட் இப்போது, சுமார் 4,500 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு வெள்ளைக்கார கம்பெனியால் தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வெள்ளைக்காரக் கம்பெனி, கடந்த 60 ஆண்டுகளாக இந்தத் தொழிலை குத்தகை எடுத்து நடத்தி வருகிறது. குத்தகைக் காலத்தை இனியும் நீடிக்காமல் நாங்களே அந்தத் தொழிலை நடத்த திட்டமிட்டிருக்கிறோம்,"

என்று, சென்னை சர்க்கார், டில்லியிடம் அனுமதி கோரியது. டில்லி சர்க்காரோ, 'கூடாது' என்று கூறிவிட்டதாகத் தெரிய வருகிறது.

"இதற்கு பதில், கல்கத்தாவில் உள்ள வடநாட்டு முதலாளி ஒருவரின் பர்ன் அண்டு கம்பெனிக்கு அந்த உரிமையைத் தரவேண்டும்" என்று டில்லி கூறியுள்ளதாம்!

இந்த வடநாட்டுக் கம்பெனி இப்போது, தனது உருக்குத் தொழிற்சாலைக்காக, மாக்னசைட்டை, குத்தகைதாரரான வெள்ளைக்கார கம்பெனியிடமிருந்து விலைக்குப் பெற்று வருகிறதாம்!

"தேசியநலன் கருதி, இந்த வெள்ளைக்காரக் கம்பெனியின் குத்தகையை ரத்து செய்துவிட்டு, வடநாட்டு முதலாளிக்கு அந்த மாக்னசைட் தோண்டும் தொழிலை விட்டு விட வேண்டும்,"

என்று, டில்லி, சென்னை சர்க்காருக்கு ஆக்ஞை இட்டுள்ளதாம்!

இந்த வடநாட்டு முதலாளி, இந்தத் தொழிலை நடத்த ரூ. 2 கோடி மூலதனத்துடன் தயாராக இருக்கிறாராம்!

சென்னை சர்க்கார், இன்னும் இந்த டில்லியின் ஆக்ஞை பற்றி முடிவு சொல்லவில்லையாம்!

ஒரிசா கவர்னரின் ஜனநாயக விரோதப் போக்கு

எதிர்க்கட்சியினர் சட்டசபையைப் புறக்கணித்தனர்

புவனேஸ்வரம், மே 28—

காங்கிரஸ் மந்திரி சபை அமைக்க அனுமதித்ததின் மூலம் கவர்னர் துரோகம் இழைத்துவிட்டதுடன், பட்சபாதமாக நடந்து கொண்டதாகவும் கூறி, இன்று அவர் சட்டசபைக்கு உரை நிகழ்த்த வந்தபோது எதிர்க் கட்சியினர் அனைவரும், கூட்டத்திற்கு வராமல் புறக்கணித்திருக்கின்றனர்.

தேர்தலில் ஆளும் கட்சி தோற்றுவிட்டால், சர்க்கார் உடனே இராஜிநாமாச் செய்ய வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட ஜனநாயக மரபாகும். ஆனால் ஒரிசாவில், கடந்த தேர்தலில் ஆளும் கட்சி தோற்றிருந்தும், சர்க்கார் தொடர்ந்து பதவியிலிருந்தது; அதன் மூலம் தொடர்ந்து ஆட்சியிலிருக்கவும், வழி செய்து கொண்டது. எனவே, இந்த நடத்தையை எதிர்க்கிறோம் என்பதன் அறிகுறியாக, கவர்னர் உரை நிகழ்த்த வரும்போது நாங்கள் சட்டசபையைப் புறக்கணிக்கிறோம்"

என்று கூறியுள்ளனர். எதிர்க் கட்சியினர் அனைவரும் ஒரு அறிக்கையில்!

நேட்டாலில் போட்டி அரசாங்கமா?

லண்டன், மே 28—

தென்னாப்பிரிக்காவின் நிறவெறிக் கொள்கைகளை எதிர்த்து நேட்டாலில் ஒரு போட்டி அரசாங்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாக பிரிட்டிஷ் ஏடுகள் எழுதியுள்ளனவாம்.

பீகார் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு

'சாத்தியமில்லை' என்கிறார் மந்திரி

டில்லி ரூ. 20 கோடி மானியம் வழங்கினால் அமுல் செய்வார்களாம்

பாட்னா, மே 29—

"பீகார் மாநிலத்தில் பூரண மதுவிலக்கு சாத்தியமில்லை," என்று, மாநில மந்திரி போலா பாஸ்வன் கூறியிருக்கிறார்.

"கள் இறக்குவோர், மற்றும் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேறு வாழ்க்கை வசதிகளைத் தேடித்தராமல், சர்க்கார் பூரண மதுவிலக்கை அமுல் செய்யாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், பூரண மதுவிலக்கு சாத்தியமில்லை என்றும், என்றாலும் மத்திய சர்க்கார் ரூ. 20 கோடிவரை மானியம் வழங்கினால் அது சாத்தியம் என்றும், மதுவிலக்கு அமுலானால் ஆண்டுதோறும் ரூ. 3·57 கோடி சர்க்காருக்கு வருமான நஷ்டம் ஏற்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னையில் பள்ளிகள் திறக்கப்படுமா?

சென்னை, மே 28—

சென்னையிலுள்ள பள்ளிகள் கோடை விடுமுறைக்குப் பிறகு மீண்டும் ஜூன் மாதத்தில் திறக்கப்படவேண்டும்.

ஆனால், தற்போது சென்னையில் பலருக்கு 'இன்புளுயன்சா' காய்ச்சல் கண்டிருப்பதாலும், அந்த நோய் பரவாமல் தடுப்பதற்காகவும் பள்ளிகளைத் திறக்கும் தேதியை ஒத்திவைக்கலாமா என்பது பற்றி கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் டில்லி சென்று திரும்பியதும் முடிவு செய்வாராம்.

அரசாங்கப் பொறியியல் தொழிற்சாலை முன் மறியல்

5 - பேருக்கு சிறைத் தண்டனை

திருவனந்தபுரம், மே 27—

திருவனந்தபுரத்திலுள்ள அரசாங்க பொறியியல் தொழிற்சாலை முன்பு மறியல் செய்ததற்காக 5 தொழிலாளர்களுக்கு நான்கு நாட்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

விசைத்தறித் திட்டம் வெறுத்து ஒதுக்கப்பட்டது

மத்திய வர்த்தக மந்திரி ஒப்புதல்!

35,000 தறிகளைத் திணிக்க திட்டமிட்டனர்-ஒரு தறியைக்கூட ஏற்க நெசவாளர் விரும்பவில்லை

புதுடில்லி, மே 28—

விசைத்தறிகளைப் புகுத்தும் திட்டம் நூற்றுக்கு நூறு தோல்வி கண்டுவிட்டது என்பதை மாநிலங்கள் சபையில் டில்லி வர்த்தக மந்திரி நித்தியானந்த கனுங்கோ ஒப்புக்கொண்டிருக்கிறார்.

1956—57-ம் ஆண்டில், 35,000 விசைத்தறிகளை கைத்தறித் துறையில் புகுத்தவேண்டுமென சர்க்கார் திட்டமிட்டிருந்தது. இதற்காக சர்க்கார், 'நிதி உதவியும் தருகிறேம்,' என்று ஆசையும் காட்டிற்று; ஆனாலும், ஒரு விசைத்தறியைக்கூட ஏற்கவில்லையாம், நெசவாளர்கள்!

இந்தத் தகவலை அந்த மந்திரியே தெரிவித்திருக்கிறார்.

"அகில இந்தியக் கைத்தறி போர்டினை, இந்த விசைத்தறி புகுத்தும் திட்டத்தை அமுல் செய்வதற்கு உதவுமாறு கேட்டால் என்ன?" என்று ஒரு உறுப்பினர் கேட்டதற்கு, வர்த்தக தொழில் இலாகா மந்திரி மொரார்ஜி தேசாய்,

"விசைத்தறி புகுத்துவதை முழுக்க முழுக்க எதிர்க்கும், ஒரு நிறுவனத்தை யோசனை கேட்பதில் பலனே இல்லை," என்று கூறியிருக்கிறார்.

மக்கள் குருதியை உறிஞ்சி கொழுத்தவர்களே!

'தாயகத்திற்குத் திரும்புங்கள்

இராணுக்களுக்கு நேபாளப் பிரதமர் எச்சரிக்கை

★

காட்மண்டு, மே 27—

"இப்போது இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் இராணுக்களும், இதர நேபாள குடிமக்களும் தங்கள் செல்வங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு நேப்பாளம் திரும்பி வந்து, தாயகத்தின் அபிவிருத்தி வேலையில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும்; இல்லாவிடில் அவர்கள் நேபாளக் குடியுரிமையை இழப்பார்கள்"

என்று, பிரதமர் தங்கபிரசாத் ஆசாரியா எச்சரித்திருக்கிறார்.

தனது பிரஜா பரிஷத் என்ற கட்சியின், கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"இராணுக்கள் ஆட்சிக் காலத்தில் மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் கொழுத்தவர்கள் இன்று, பெங்களூரிலும், சென்னையிலும் தங்களின் செல்வங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்; அவர்கள் எல்லாம் உடனே தாயகம் திரும்பிவிட வேண்டும் என்று எச்சரிக்கிறேன்."

நம் நாடு

சென்னை 29—5—57 புதன்

பாசீசப் பட்டாளம்!

இலங்கைப் பிரதமர் சாலமன் பண்டார நாயகா சமதர்மக் கருத்துடையவர் எனச் சொல்லப்படுகிறது. ஆனல் அவர் மேற்கொண்டு வரும் நடவடிக்கை எதிலும் அச்சமதர்மக் கோட்பாடு இடம் பெற்றிருக்கக் காணேம்.

சமதர்ம கோட்பாடு கொண்டவராக இலங்கைப் பிரதமர் இருப்பது உண்மையானல், அக்கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கைத் தீவின் எதிர்காலத்தை ஆக்குவதிலேயே அவர் விருப்புடையவராக இருந்திருக்கவேண்டும். அத்தகு உயர்ந்த போக்கைத்தான், ஒரு சமதர்மியிடம் எவரும் எதிர்பார்ப்பர்.

ஆனல் பண்டாரநாயகாவின் நடத்தையோ, சமதர்ம இலட்சிய நோக்குக்கே முரண்பட்டதாக இருந்துவருகிறது. அதுவுமன்றி, சிங்கள வெறிக்குத் தூபமிட்டுத் துணை நிற்பதாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களை—அவர்தம் மொழியுடன்—ஒழித்துக் கட்டுவதாகவும், பண்டா கொண்டுள்ள சமதர்மப் போக்கு இருந்துவருகிறது.

இலங்கையில் என்றோ குடியேறி, வெறும் மலைக் காடாகக் கிடந்த அத்தீவை செல்வம் கொழிக்கும் போக பூமியாக மாற்றி அமைத்தவர்கள் தமிழ் நாட்டுத் தமிழ் மக்கள்தான் என்பதை, இலங்கை வரலாற்றிலிருந்து பண்டா தெரிந்து கொண்டிருக்கலாம். அதேபோன்று, இன்றுதானும், இந்தியப் பிரதமர் நேருவும் ஒன்ருக இணைந்து, நாடற்ற 'நாடோடி' மக்கள் எனச் சிறப்பித்துக் கூறும், இலங்கைத் தீவில் இருந்துவரும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களும், அக்காலம் குடிபுகுந்த தமிழ் நாட்டுத் தமிழர்களின் வாரிசுகள்தான் என வரலாறு கூறுவதையும், அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்வரலாற்று உண்மையைத் தெரிந்திருந்தும், இந்தியப் பிரதமர் நேருவோ அத்தமிழ் சந்ததியினரை நாடற்ற 'நாடோடிகள்' எனக் குறிப்பிடத் துணியும்பொழுது, சிங்கள வெறிக்குத் தம்மை ஒப்படைத்துக்கொண்டிருக்கின்ற பண்டாவிடம் வேறு நியாயமான எதைத்தான் பார்க்க முடியும்?

இலங்கையில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இந்தியத் தமிழ் மரபினரை நாடற்ற 'நாடோடிகள்' எனக் குறிப்பிடுவதில்தான், இந்தியப் பிரதமர் நேருவின் சமதர்மமும், இலங்கைப் பிரதமர் பண்டாவின் சமதர்மமும் ஒன்றில் ஒன்று உருவந்தெரியாது ஒடுங்கிவிடுகின்றன!

பண்டாவின் கைக்கு இலங்கை ஆட்சி மாறுகின்றவரை சிங்கள மொழிக்குத் தரப்பட்டிருந்த வாய்ப்பாவே தமிழ் மொழிக்கும் தரப்பட்டிருந்தது. அச்சமத்துவ நிலை பண்டா பதவி பெற்றதும் அழிக்கப்பட்டுவிட்டது. ஒரே ஆட்சி மொழி சிங்களந்தான் எனச் சட்டம் செய்துவிட்டார் பண்டா.

சிங்களப் பற்று-வெறிகொண்டிருந்த எந்த ஆட்சித் தலைவர்களும் செய்யத் துணியாத தமிழ்மொழி ஒதுக்கலை, பண்டா தாம் பிரதமரான உடனே முதற் பணியாகச் செய்து முடித்துவிட்டார். இத்தகு மொழி வெறியைத்தான் 'சமதர்மம்' எனக் கொள்ளப்படுவதாக இருந்தால், பண்டாவும் நூற்றுக்கு நூறு சமதர்மிதான் என்பதில் ஆட்சேபணை இல்லை.

தமிழ் மொழி ஒதுக்கப்பட்டு சிங்கள மொழிக்கு ஏற்றம் அளிக்க பண்டா முன்வந்ததில் குறிப்பிட்ட தமிழ் மொழியின் வீழ்ச்சி மட்டுமே இருக்கவில்லை. அதில் பயங்கர உண்மை ஒன்றும் உள்ளடங்கி இருக்கிறது.

தமிழ் மொழியை ஒதுக்கித் தள்ள பண்டா மேற்கொண்ட முயற்சியில் மறைந்துகிடக்கும் உண்மையை உள்ளவாறு உணர்ந்துகொண்ட இலங்கைத் தமிழ் மக்கள், தாங்கள் பெரும் தொகையினராக வாழும் பகுதிக்கு நிபந்தனையுடன் கூடிய அரசியல் சுதந்திரம் கோரத் தொடங்கினர். அந்தச் சுயாட்சி இயக்கம் பெடரல் கட்சியின் பாதுகாப்பில் நாளாக நாளாக ஆக்கம் பெற்றுவருகிறது.

வரப்போகின்ற ஆகஸ்டு திங்களில் அவ்வியக்கம் ஒத்துழையாமையை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. அவ்வறப் போராட்டத்திற்கு இலங்கை தமிழ் மக்களிடை போதரவு பெருகிவருகிறது.

தமிழ்மக்களின் உத்தேச அறப் போராட்டத்தின் விளைவாக அமைதிக்கு கேடு நேரக்கூடும் எனக் குறிப்பிட்டுவிட்டு, அதை ஒடுக்க ஒரு இலட்சம் இளைஞர்களைக் கொண்ட சொந்தக் கட்சி 'பட்டாளம்' ஒன்றைத் திரட்டப் போவதாக, இலங்கைப் பிரதமர் பண்டா அறிவித்துள்ளார். நாடாளும் கட்சியான மக்கள் கூட்டு முன்னணி கட்சியின் கூட்டமொன்றில் தலைமை வகித்த நேரத்தில், மேற்படி படை திரட்டும் அறிவிப்பை பண்டா வெளிப்படுத்தியுள்ளார். அதை யொட்டி, மேற்படி கட்சி, படை திரட்டும் பணியை உடனடியாக செய்து முடிக்க ஒரு குழுவையும் நியமித்துள்ளது.

பண்டா உருவாக்க விரும்பும் ஒரு இலட்சம் இளைஞர்களைக் கொண்ட படையில் எவர் இடம் பெற்றிருப்பர் என்பதைச் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம். சிங்கள வெறியர்கள்தான் அப்படையில் இடம் பெற்றிருப்பர் என்பது வெள்ளிடைமலை.

இலங்கை பெடரல் கட்சியினர் மேற்கொள்ள இருக்கும் ஒத்துழையாமையால் அமைதி கெடக்கூடும் என பண்டார நாயகா கூறுவது வெறும் கற்பனையாகும். அப்படியே அமைதி கெடுவதாக இருந்தாலும், அரசாங்கப் பாதுகாப்புப் படையைக் கொண்டே, அதைத் தடுத்துக்கொள்ளுவது சாத்தியமாகும். அதுதான் அரசாங்கத்தின் நீங்காக் கடமையுமாகும்.

ஆனல் பண்டாவோ அமைதி காக்கப் படை திரட்டப் போவதாகப் பறைசாற்றியுள்ளார். அதுவும் ஒரு இலட்சம் இளைஞர்களைக் கொண்டதாக அப்படை இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

பெடரல் கட்சி தொடங்க இருக்கும் ஒத்துழையாமை இயக்கம் அமைதிக்கு ஊறுசெய்யாமல் இருந்தாலும், தாம் புதிதாகத் திரட்ட இருக்கும் 'ஒரு இலட்சம் இளைஞர் படையை' ஏவிவிட்டு, அமைதியைக் குலைக்க பண்டா முன்வரக் கூடும். அதை ஒரு காரணமாகக் காட்டி, ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ளும் தமிழ் மக்கள்மீது கொடும் அடக்குமுறைகளை வீசக்கூடும். அத்துடன் 'அமைதி காத்தல்' என்ற பெயரால் நூற்றுக் கணக்கில் தமிழ்மக்களை பண்டா சுட்டுத்தள்ளக் கூடும்.

பண்டா திரட்ட திட்டமிட்டுள்ள படை, அமைதி காக்கும் படை அல்ல. அது, வேண்டுமென்றே சீரழிவையும் குழப்பத்தையும் உருவாக்கும் பாசிசப் படையாகும்.

தலைமறைவில் அமைதி கெடுக்கும் தீவினைகளை செய்துவிட்டு, அத்தீவினைகளை தமிழ் அறப்போர் வீரர்கள்மீது ஏற்றி, அவர்களைக் கொடும் அடக்குமுறைகளுக்கு ஆளாக்கிச் சுட்டு வீழ்த்த, பண்டா தீட்டியுள்ள சதித் திட்டம்தான் ஒரு இலட்சம் இளைஞர் படை — பாசிசப் பட்டாளம் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. அணுகுண்டு ஒழிப்பைவிட, பண்டாவின் பாசிசப் படை திரட்டும் மனப்போக்கைக் கருவறுப்பது, மனிதசேவைகள் அனைத்திலும் தலைசிறந்த சேவையாகும்.

'கேரள கம்யூனிஸ்டு சர்க்கார்மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்'

ஸ்ரீகண்டன் நாயர் மதிப்பீடு

"கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், மக்கள் 'கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தால் பல நல்ல காரியங்களை செய்வார்கள்' என எதிர்பார்த்தனர்; ஆனல், அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் மக்கள் அந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர்,"

என்று, புரட்சிகர சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் (ஆர். எஸ். பி.) என். ஸ்ரீகண்டன் நாயர் 'தினமலர்' நிருபரிடம் கூறியதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

அச்செய்தியில் அவர் மேலும் கூறியதாவது:—

"கம்யூனிஸ்டுக் கட்சி பதவி ஏற்றதும் அவர்கள் தங்கள் கட்சியிலுள்ள அரசியல் கைதிகளை மட்டும்தான் விடுதலை செய்தார்களே தவிர, இதர கட்சிகளைச் சார்ந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யவில்லை.

"காங்கிரஸ் சர்க்கார் பதவியிலிருக்கும்பொழுது சட்டசபையின் எதிரில் நடைபெற்ற போராட்டத்தின்போது கைது செய்தவர்களை விடுதலை செய்வதாக காங்கிரஸ் சர்க்காரே ஒப்புக்கொண்டிருந்தனர்; அந்த அரசியல் கைதிகளைக்கூட கம்யூனிஸ்டு சர்க்கார் விடுதலை செய்யவில்லை.

"அரிசி விலை கூடவில்லையென மூடிமறைத்தார்கள். பொதுமக்கள் குரல் கிளப்பவே, இரண்டு வார சேமிப்பு அரிசி மட்டும்தான் சர்க்கார் கைவசமுண்டு என மக்களைப் பயமுறுத்தினர்; இவர்களின் பயமுறுத்தல் 'கள்ள மார்க்கெட்'காரர்களுக்குப் பேருதவியாக அமைந்தது. மிதமான விலைக்கு அரிசி விற்பனை செய்ய வேண்டுமென ஒரு அவசரச் சட்டத்தைக்கூட கொண்டுவர அவர்களுக்கு முடியவில்லை.

"கம்யூனிஸ்டுக் கட்சியின் தூண்டுதலால் ஏப்ரல் மாதம் 25-ந் தேதிவரை அவர்கள் ஊழியர்களும், அனுதாபிகளும் ஆக்கிரமித்துள்ள பூமிகளையும், குடியேற்றங்களையும் வெளியேற்ருமல் ஏப்ரல் மாதம் 25-ந் தேதிக்கு மேல் நடைபெற்ற குடியேற்றங்களையும், ஆக்கிரமிப்புகளையும் வெளியேற்றினர். இது, அவர்களின் கட்சி ஊழியர்களையும், அனுதாபிகளையும் திருப்தி செய்த ஒரவஞ்சனையாகும். இந்த நிலைமை, நிலத்தை தேசீயமயமாக்கும் வேலை கைகூடுமா என்ற சந்தேகத்தை அவர்களுக்கு உண்டாகியுள்ளது.

"வருடம் ரூ. 3,600 நிகர வருமானம் கிடைப்பதற்கு அதிகமான சொத்தைத்தான் தேசீயமயமாக்கப்போவதாக அவர்கள் கட்சி அறிக்கைகள் கூறுகின்றன. இதனல், மிகக் குறைவான பூமியை மாத்திரம்தான் தேசீயமயமாக்க முடியும். தேசீயமயமாக்கும் பூமியைத் தங்கள் கட்சி ஊழியர்களுக்கு விநியோகித்து அவர்களைத் திருப்திப்படுத்தலாம்.

"தங்கள் கட்சியைப் பலப்படுத்த மற்றக் கட்சிகளின் நியாயமான கோரிக்கைகளைக்கூட உதாசீனம் செய்துவருகிருர்கள். தனி மனிதர்களால் நடத்தப்படும் போக்கு-வரத்துக்களை சீர்செய்ய அமைத்ததில் போக்கு-வரத்து போர்டில் உறுப்பினர்களாக நியமனம் பெற்றிருப்பவர்கள் அனைவரும் கம்யூனிஸ்டுக்காரர்கள்தான்; முன்பு காங்கிரஸ் சர்க்கார் பேருக்காவது ஒரு கம்யூனிஸ்டு, ஒரு ஆர். எஸ். பி., ஒரு பி. எஸ். பி. உறுப்பினர்களை நியமித்து வந்தனர்.

"காங்கிரஸ் சர்க்காரில், ஐ.என்.டி.யூ.சி. நிறுவனம் இதர தொழிற் சங்கங்களைத் தகர்த்து வந்ததுபோல், இப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சி யூனியன்கள் இதர யூனியன்களை தகர்த்துவருகின்றன.

"ஆறுமாத காலத்திற்கு, கம்யூனிஸ்டுக் கட்சியின் நிர்வாகத்தின் கீழுள்ள தொழிற் சங்கங்கள் தங்களது உரிமைகளைக் கோரி போராட்டங்கள் நடத்தக் கூடாதென கம்யூனிஸ்டுக் கட்சி உத்தரவிட்டுள்ளது. ஆனல், இதர கட்சிகளின் நிர்வாகத்திலுள்ள யூனியன் தொழிலாளர்கள் தங்கள் உரிமைப் போராட்டங்களை ஆரம்பித்தால் கம்யூனிஸ்டுக் கட்சி சர்க்காரைக் கவிழ்ப்பதற்கு நடத்தும் போராட்டங்கள் என விஷமப் பிரச்சாரம் செய்கிருர்கள்."

சிங்கள வெறியர்களை தமிழர்மீது ஏவிவிடத் திட்டம்

வெறிகொண்ட பண்டாரநாயகா படை திரட்டுகிருர்

சுதந்திரப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆயத்தமாகின்றனர்

கொழும்பு, மே 27—

இலங்கைத் தமிழர்கள், வரும் ஆகஸ்டு திங்களில், தமிழரசுக் கட்சியின் தலைமையில் திரண்டெழுந்து தனி நாடு கோரிக்கைக்காக நடத்த உத்தேசித்திருக்கும் பல அறப் போராட்டங்களைக் கொண்ட ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்குவதற்கு, பண்டார நாயகா சர்க்கார் எல்லாவகையான அடக்குமுறைகளையும் கையாளும் என்று தெரியவருகிறது.

பண்டார நாயகாவே தனது கட்சி மாநாடு ஒன்றில் பேசுகையில், 'குழப்பக்காரர்களை அடக்குவதற்கு எல்லாவகையான நடவடிக்கைகளையும், எனது அதிகாரத்திற்குட்பட்ட சகல வழிமுறைகளையும் பிரயோகிப்பேன்' என்று கூறியுள்ளாராம்.

மிரட்டலுக்கு அஞ்சோம்!

'இதுபோன்ற மிரட்டலுக்கு அஞ்சோம்,' என்று தமிழரசுக் கட்சிச் செயலாளர் டாக்டர் நாகநாதன் அறைகூவியுள்ளார்.

சிங்களர் படையாம்

பண்டார நாயகாவின் 'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி'-யினர், தமிழரசுக் கட்சியினர் ஆகஸ்டில் போராட்டம் நடத்தினல் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கென சிங்களவர் கொண்ட படை ஒன்றைத் திரட்டப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

பண்டாவின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில்தான் சிங்கள வெறியர்களுக்குத் தூபமிட்டு, அவர்களைத் தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பண்டாவின் சிங்கள இனமொழி வெறிக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு.

ஒரு இலட்சம் சிங்களவரைத் திரட்டி, தமிழர்கள் போராட்டம் நடத்தும்போது, அமைதியைக் காக்க உதவப்போகிருர்களாம்!

அறியாமையின் அளவு

அலகாபாத், மே 26—

பண்டித இராசேந்திர பிரசாத் சீனுவின் தலைவர்!

'வைட்டமின்' எனப்படுவது வையட்நாமில் வசிப்பவர்களின் பெயராகும்!

மகாத்மா காந்தி மிகவும் வேகமாக ஒடக்கூடியவர்!

கான்பூர், மைசூர், பூனு பகுதிகளில் கப்பல்கள் கட்டப்படுகிறது!

இந்தியாவின் புகழ் பெற்ற வைரம் தங்கம்!

வானத்திற்கு வர்ணங்கள் கதிரவனிடமிருந்து கிடைக்கிறது!

இப்படி, வேடிக்கையான — அறியாமை நிறைந்த விடைகளை சமீபத்தில் நடைபெற்ற உத்திரப் பிரதேச மாநில போலீஸ், நிதி இலாகா வேலைகளுக்கு நடைபெற்ற தேர்வில் கலந்துகொண்டவர்கள் தந்துள்ளனராம்!

மொத்தம் 1,034 அபேட்சகர்கள் தேர்வில் கலந்துகொண்டனராம். இதில் 18 அபேட்சகர்கள் மட்டுமே 60 சதவிகிதத்திற்கு அதிகமாக மார்க்குகள் பெற்றுள்ளனராம்!

இந்தியாவில் 800 தாய் மொழிகள்!

இந்தியாவில் வெவ்வேறு தாய் மொழிகள் 800 பேசப்படுவதாக ஐ. நா. நிறுவனத்தின் புள்ளி விவரக்கணக்கு அறிவிக்கிறது.

‘ஜனநாயக முறைகள் வந்துவிட்டன’

‘ஜனநாயகப் பண்பு இன்னும் மலரவில்லை’

இரா. செழியன் பேச்சு

25-5-57 அன்று நடைபெற்ற சென்னை-சூளை நகர இளைஞர் கழகத்தின் 24-ம் ஆண்டு விழாவில் தோழர் இரா. செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :-

“இந்த நகர இளைஞர் கழகம் 24 ஆண்டுக் காலத்தை முடித்து, அந்த நிறைவு விழாவை இன்று கொண்டாடுகிறது. இவ்வளவு நீண்டகாலம் 24 ஆண்டுகள் ஒரு தனிப்பட்ட சங்கம் நீடித்து வந்திருக்கிறதென்பது, அந்தச் சங்கத்தினர் கொண்ட உறுதிக்கும், அவர்கள் ஆற்றிய பணிக்கும் எடுத்துக்காட்டாக இருக்கிறது. இருபத்து நான்கு ஆண்டுகளை முடித்து, கட்டிளங் காளைப் பருவத்தின் சிறந்ததான வயதில் இந்த இளைஞர் கழகம் நிற்கிறது.

நாம் சந்தேகத்துக்கு ஆளானோர்?

“இந்த விழாவிற்குத் தலைமை தாங்கும் மாநிலப் பிரதம நீதிமன்றத் தலைவர் அவர்கள், இந்த விழாவிற்குத்தான் தலைமை தாங்க ஒப்புக்கொண்டதற்கான காரணத்தைக் கூறும்பொழுது ‘நாள்தோறும் குற்றவாளிகளைக் கண்டு கண்டு அலுத்துப்போகும் நான், இப்படிப்பட்ட நல்லவர்களையாவது மாலை நேரத்தில் காணலாமே என்று வந்தேன்,’ எனக் குறிப்பிட்டார்கள். நாள்தோறும் குற்றவாளிகளைப் பார்த்துப் பார்த்து நமது விழாத் தலைவர் அலுத்துப்போனவர்! நாங்களோ, அரசியல் உலகிலும், சமுதாய இயலிலும் குற்றவாளிகளாகப் பன்னெடுங்காலமாகப் பார்க்கப்பட்டவர்கள்! பலவகைப்பட்டோரின் வேறு வேறு விதமான சந்தேகத்துக்கு ஆளானவர்கள்! இவ்வாறு கூறுவதால், அந்தச் சந்தேகத்தைப் போக்கவோ—விளக்கவோ நான் முயலுவேன் என்று நினைக்க வேண்டாம். அதை அரசியல் கூட்டங்களில் வைத்துக்கொள்ளலாம். இந்தக் கழகம், அதன் சார்பில் நடைபெறும் ஆண்டு விழாவும் அரசியல் உலகத்துக்கு அப்பாற்பட்டவைகளாகக் கருதப்படுபவை. அதில் வீணாக, அன்றாட அரசியலில் அலைமோதும் பிரச்சினைகளை எடுத்துவைத்து நான் விவாதிக்கப் போவதில்லை.

அரசியலைப் பற்றி ஆராய்வதில் தவறேது?

“அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றாலும், அரசியலைப்பற்றி எதுவுமே தெரியாமலும் இருந்துவிடமுடியாது. தனிப்பட்ட அரசியல் கட்சிகளைப் பற்றி விவாதிக்காவிட்டாலும், அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும், அரசியலைப் பற்றி—அரசியலின் அடிப்படை உண்மைகளைப் பற்றி நாம் ஆராய்வதில் தவறொன்றும் கிடையாது. கழகம் என்றாலே பலர் ஒன்றுகூடி தத்தமக்குள்ள கருத்துக்களைப் பரிமாறி, ஆய்ந்து அறிந்து செயல்படும் இடமாகும். பலர் ஒன்றுகூடி ஆய்ந்து அறிந்து முடிவெடுப்பதற்காகப் பண்டைத் தமிழகத்தில் இருந்த அமைப்புகள் கழகமெனவும், சங்கமெனவும், அம்பலமெனவும், பொதுயில் எனவும் பெயர் பெற்றன. பண்டையக் கிரேக்க நாட்டிலும், ஊரார் ஒன்றுகூடி ஆய்ந்து அறிந்து முடிவெடுக்கும் இடங்கள் பல இருந்தன. அவ்வாறு அவர்கள் நடத்திய சிறுசிறு விவாதங்கள் தாம், அந்தந்தக் காலத்தில், அந்தந்த நாட்டில் அரசியல் சமுதாயச் சூழ்நிலைகளை அமைப்பனவாக இருந்தன. ஆய்ந்து—அறிந்து எடுக்கப்படும் முடிவுதான் நல்லது எனக் கொண்டு, அதுவே செயல்பட நல்ல வழி எனவும் அவர்கள் கொண்டார்கள்.

நல்ல ஆட்சி மலர!

“இந்தக் கழகம் ஒரு இளைஞர் கழகம்; நான் சார்ந்திருக்கும் அரசியல் கழகங்கூட இளைஞர்களை அதிகமாகக் கொண்டது; அரசியல் வயதிலும் இளமையானது. இந்த நாட்டில் நிறுவப்பட்டுள்ள குடியாட்சிகூட இளமையாக இருக்கிறது. ஆரம்ப நிலையிலேயே, குடியாட்சிக்கு - ஜனநாயகத்துக்கு நல்லதொரு சூழ்நிலை அமைக்கப்பட்டால்தான், அதன் எதிர்காலம் நல்லதாக இருக்கும். அடிப்படை சரியாக அமைக்கப்படாவிட்டால், குடியரசு ஆட்சி நல்ல ஆட்சியாக மலராது.

அந்தச் சந்தேகம்!

“குடியாட்சி அல்லது ஜனநாயகம் என்றாலே பலருக்குச் சந்தேகம் தோன்றுவதைக் காண்கிறோம். படிக்காதவர்களுக்கு மட்டுமல்ல—படித்தவர்களுக்கு—படித்துப் பட்டம் பல பெற்று பெரிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியர்களாக இருப்பவர்கள் கூட, அரசியலில் ஈடுபடுவர்களைப் பார்த்து, ‘ஏனப்பா, அரசியல் சகதியில் இறங்கிவிட்டாய்? அதுவும் போதாதென்று தேர்தலில் போட்டியிடுகிறாயே! வெற்றி பெறமுடியுமா? என்று அரசியலைப் பற்றி மிகக் குறைவான மதிப்புடன் கேட்கிறார்கள். ‘தேர்தலில் ஈடுபடுவது ஜனநாயகக் கடமைகளில் ஒன்று’ என நாம் சொன்னால், ‘ஜனநாயகமா? இந்தியாவிலா? இந்தியாவில் ஜனநாயகம் வெற்றிபெறாது போ!’ என்று கூறுகிறார்கள்.

பால் கசக்குமா? கரும்பு கைப்பாகுமா?

“ஜனநாயக அமைப்பின்கீழ், அண்மையில் நடந்த தேர்தல்களில் சில பல தவறுகள்—குறைகள் இருந்தன; அந்தக் குறைகளை நாமல்ல—ஆளும் கட்சியினரே எடுத்துக் கூறுகின்றனர். ஆனால் அந்தக் குறைகளைப் பற்றி விளக்கவோ, விரிக்கவோ இங்கு தேவையில்லை; ஆனால் அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு ‘ஜனநாயகம் இந்தியாவில் வெற்றிபெறாது’ என்று ஒரு பேராசிரியர் கூறியதைப் போலக் கூறிவிடக் கூடாது. ஜனநாயகம் தோற்றது என்றால் மக்களுக்குத் தங்கள் மீது இருந்த நம்பிக்கையை போக்கிக்கொண்டார்கள் என்றுதான் அர்த்தம். ஜனநாயகம் என்றும் தோல்வியடையாது. பால் கசக்குமா? கரும்பு கைப்பாகுமா? தேன் இனிக்காமல் போகுமா? அதைப்போல, ஜனநாயகமும் தோற்றுப் போகக் கூடியதல்ல!

“இந்தியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை என்னவென்றால், இங்கு குடியாட்சி முறை வந்துவிட்டது—குடியாட்சிப் பண்பு வரவில்லை!

வேறுபாடு உண்டு?

“குடியாட்சி பண்பு வேறானது; குடியாட்சி முறை என்பது வேறானது.

“சட்டத்திற்கும் நீதிக்கும் உள்ள வேற்றுமையைப் போல, விஞ்ஞான முறைக்கும் விஞ்ஞானப் பண்புக்கும் உள்ள வேற்றுமையைப் போல, ஜனநாயக முறைக்கும் ஜனநாயகப் பண்புக்கும் வேறுபாடு இருக்கிறது.

முறை வந்தது—பண்பு வளரவில்லை

“இந்தியாவில் விஞ்ஞான முறை வந்துவிட்டது—விஞ்ஞானப் பண்பு வரவில்லை. விஞ்ஞான முறையில் இயங்கும் பலவகைச் சாதனங்கள்-சாமான்கள் இந்தியாவுக்குள் வந்துவிட்டன — விமானம், இரயில், மின்சாரம், ரேடியோ சினிமா, போன்று பல விஞ்ஞான அற்புதங்கள் வந்துவிட்டன; இருந்தாலும், வானில் வட்டமிடும் விமானத்தைப் பார்த்தால்கூட, அதன் அருகே ஒரு கருடன் பறந்தால், நமது நாட்டில் அந்தக் கருடனைப் பார்க்கிறவன் தனது கன்னத்தில் போட்டுக் கொள்கிறான். வட்டமிடும் விமானம் அவன் மதிப்பைப் பெறவில்லை—மதியைத் தூண்டவில்லை; ஆனால் வான்பருந்து இவன் வணக்கத்தைப் பெறுகிறது.

“பறக்கும் விமானம், பாடும் பெட்டி, ஆடும் நிழல், ஓடும் இரயில் - இப்படிப் பல விஞ்ஞான முறைகள் இந்த நாட்டிற்கு வந்தாலும், பார்ப்பவனின் மனதில் எத்தகைய சலனமும் ஏற்படவில்லை. அது பழைய கருத்துக்கள், முடிவுகளின்படிதான் இயங்குகிறது. விஞ்ஞான முறைகள் வந்ததைப்போல, விஞ்ஞான மனப்பான்மை வரவில்லை! விஞ்ஞான முறைகள் வந்ததைப்போல விஞ்ஞானப் பண்பு வரவில்லை!

வளர்க்க முடியுமா?

“அதுபோல, ஜனநாயக முறைகள்—குடியாட்சி முறைகள் இந்தியாவிற்கு வந்துள்ளன. பெரியதொரு அரசியல் சட்டம், மக்கள் சபை, மாநில சட்டசபை போன்ற அமைப்புகள், ஐந்தாண்டுக்கொரு முறை தேர்தல், ஓட்டுப் பெட்டி, ஓட்டுகள் இவைகளெல்லாம் ஜனநாயக முறைகள்; அவைகள் மட்டுமே ஜனநாயகத்தை—ஜனநாயகப் பண்பை நாட்டுக்கு அளித்துவிடாது. ஜனநாயகப் பண்பு வளர்ந்தால்தான் ஜனநாயகம் நிலைபெற்றதாகும். ஜனநாயகப் பண்பு என்பது, அரசியல் உலகில் மட்டுமல்ல; பொதுவாக நாட்டு வாழ்வில் - மக்களின் அன்றாட வாழ்க்கையில் - சமுதாய இயலிலும் காணப்படும் ஒரு பண்பாக இருந்தால்தான் அதனுடைய எதிரொலி அரசியல் உலகிலும் விழும். அதை விடுத்து அரசியலில் மட்டும் ஒரு தனி ஜனநாயகப் பண்பை நாம் வளர்க்க முடியாது.

சூழ்நிலை ஏற்பட!

“எனவே, இந்த நாட்டில் ஜனநாயக அரசு நிலைபெறவேண்டுமென்றால்—ஜனநாயகப் பண்பும் முறையும் துலங்கவேண்டுமென்றால், நாட்டில் உள்ள அனைவரும், அவர்கள் அரசியலில் இருந்தாலும் சரி—அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாயிருந்தாலும் சரி, அல்லது அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களென நினைத்துக் கொண்டிருப்பவர்களாயினும் சரி, பேராசிரியர்களாயினும்-படித்தவர்களாயினும் சரி, அனைவரும் கூடி சமுதாயத்தில் ஜனநாயகம் உருவாக்கப்பட்டால்தான், அரசியலிலும் ஜனநாயகம் உருவாக முடியும். இந்த அடிப்படைத் தேவை தனிப்பட்ட அரசியல் கட்சிகளுக்காக அல்ல—எல்லா அரசியல் கட்சிகளுக்கும் முக்கியமானதொன்றாகும்; அரசியலின் எதிர்காலத்துக்கு அவசியமானதொரு சூழ்நிலையாகும்.

“சமுதாயத்தில்—மக்கள் எண்ணத்தில் ஜனநாயகம் பரவும்படியான தூயபணியை இதுபோன்று இருக்கும் இளைஞர் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும். எதையும் ஆய்ந்து—அறிந்து—செயல் வகுக்கும் திறனை மக்களிடம் உண்டாக்கவேண்டும். அதுதான் ஜனநாயகத்திற்கும், ஜனநாயக வளர்ச்சிக்கும் நல்லது. ஜனநாயகம் என்பது மக்கள் பார்த்து அரசியலுக்குத் தருவதே அன்றி, அரசியல் பார்த்து மக்களுக்குத் தருவதல்ல.”

மதுரை மாவட்டத்தில்

தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.

வரவேற்பு - பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

மதுரை மே 19—

சென்னை சட்டசபை உறுப்பினர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் இன்று மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

கொடியேற்றம் :

காலை 9 மணியளவில் கல்லக்குடி நடராசன் படிப்பகத்திலும், கீழ் மதுரையிலும் கழகக் கொடிகள் ஏற்றிவைத்துக் கொள்கை விளக்கமளித்தார்.

மகிழ்ச்சி மன்ற ஆண்டுவிழா :

இலக்ஷ்மிபுரத்தில் காலை 10 மணியளவில், திரு. வி.வி. இராமசாமி தலைமையில், க.இ. சுக்குனி பி. சே. ஆர். இலட்சுமிகாந்தம் எம். எல். ஏ., கந்தசாமி புலவர் ஆகியோர் கலந்து கொண்ட மகிழ்ச்சி மன்ற ஆண்டு விழாவில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் ‘தமிழக மகளிர்’ என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினர்.

வரவேற்பு :

மாலை 4 மணியளவில் சிங்காரபுரம் சத்தியவாணிமுத்து படிப்பகத்தாரால் தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. அவர்கட்கு ஓர் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது; தோழியர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்:

மாலை 6 மணியளவில் பழைய குயவர்பாளையத்தில் உள்ள கல்லக்குடி நடராசன் படிப்பக 3-ம் ஆண்டு விழா, படிப்பகத்தின்முன் நடைபெற்றது; தோழர் ச. அன்பானந்தன் தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்ட பின் கழகக் கொள்கைகளை விளக்கியும், அம்மையாரைப் பாராட்டியும் தோழர்கள் தேவராசன் டுக. எஸ். சந்தானம், எஸ் முத்து ஆகியோர் பேசினர்.

பின் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் நன்றி கூறிக்கொண்டு, கழகத்தின் குரல் சட்டசபையில் ஒலிக்கும் வகைபற்றி விளக்கிப் பேசினர்.

குட்டிமேக்கிப்பட்டியில் கழகக் கிளைத் தொடக்கம்

20—5—57-ல் மதுரை மாவட்டம் குட்டிமேக்கிப் பட்டியில் தி. மு. க. கிளைத் தொடக்க விழா மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராசன் பி. எஸ். மணி, தோழியர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. ஆகியோர் கழகக்கொள்கைகளை விளக்கிப் பேசினர். கிளைச் செயலாளர் நன்றிகூற விழா முடிந்தது.

திருப்பூவனம்:

21—5—57 மாலை 7 மணியளவில் திருப்பூவனம் தி. மு. கழகச் சார்பில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு ஓர் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழியரைப் பாராட்டித் தோழர்கள் சோனையா, கே. எஸ். சந்தானம், எஸ். முத்து ஆகியோர் பேசிய பின், தோழியர் சத்தியவாணிமுத்து நன்றி தெரிவித்தும் கழகக் கொள்கைகளை விளக்கியும் வரி உயர்வைக் கண்டித்தும் பேசினர்.

ஓடைப்பட்டி :

18—5—57ல், ஓடைப்பட்டி தி. மு. கழகச் சார்பில் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையாரை வரவேற்று ஓடைப்பட்டி வானொலித் திடலில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குத் தோழர் போ. வேலன் தலைமை வகித்தார். திரு. அழகேசன் திராவிட நாட்டுப் பண்ணிசைத்தபின் தோழர் சின்னையன் வரவேற்புரைத்தார்.

அடுத்து நடைபெற்ற கவியரங்கத்தில் தோழர் ஏ. எஸ். பி. சிவன் அவர்கள் இன உணர்வுக் கவிதை ஒன்று அரங்கேற்றிய பின் தலைவர் தன் முன்னுரை மொழிந்தார்.

அடுத்து சட்டசபையில் தி. மு. கழகத்தின் தொண்டுகளை விளக்கியும், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையாரைப் பாராட்டியும் தோழர் மா. பாண்டியனும், சமூகப் பிரச்சினைகளில் தி. மு. கழகத்தின் அக்கறை பற்றியும், புதிய வரிகளின் கொடுமை பற்றியும் மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். முத்து அவர்களும் பேசினர்.

அடுத்து தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்துவிட்டு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் கழக இலட்சியங்களை விளக்கியும், ஆட்சியாளரின் முறை தவறிய கொள்கைகளை விவரித்தும் பேசினர்.

அவர், தம்முடைய சொற்பொழிவுக்கு முன்பு 3 குழந்தைகட்கு ‘பூங்கோதை,’ ‘பொற்கொடி,’ ‘செங்குட்டுவன்’ என்று பெயர் சூட்டினர்.

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கட்கும், மற்ற சொற்பொழிவாளர்களுக்கும் சுக்காங்கப்பட்டி, காமாட்சிபுரம், வெள்ளையம்மாபுரம், சின்னமனூர், ஓடைப்பட்டி ஆகிய ஊர் தி. மு. கழகங்களின் சார்பிலும், அப்புப்பட்டி மாணவர்கள் சார்பிலும், சின்னமனூர் கொடிக்கால் விவசாயிகளின் சார்பிலும் மலர்மாலைகள் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

‘செத்துப்போனவர்’ உயிர்பெற்ற விந்தை!

டாக்டர் கையாண்ட அரிய சாதனை!

‘செத்துப் போன’ பெண் ஒருத்தி பிழைத்துக் கொண்ட அதிசயம் லாஸ் எஞ்செல்ஸ் மருத்துவமனையில் நிகழ்ந்துள்ளது.

38 வயதான டோரத்தி ஹில் என்ற பெண்மணி, ஒன்பது வயதுப் பெண்ணொருத்திக்குத் தாயாவாள். அந்த அம்மையார், இருதய நோய் காரணமாக மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தார்.

அவர் இருதயத்தில் ஒரு ஆபரேஷன் செய்யப்பட்டது; அப்போது, அவரது இருதயம் முறை பிறழ்ந்து அடித்துக்கொண்டது என்றும், ஒரு நிமிடம் அது நின்றேவிட்டது என்றும் தெரிகிறது.

பின்னர் ஆபரேஷன் செய்த டாக்டர், அம்மையாரின் இருதயத்தை நிமிடத்திற்கு 80 முதல் 90 தடவைகள் தடவிக் கொடுத்து இரத்த ஓட்டம் நீடிக்குமாறு செய்து, அவரின் இருதயத்தை ஓடச் செய்திருக்கிறார்.

டாக்டர் அதுபோல ஒரு இரண்டரை மணிநேரம் தடவிக் கொண்டிருக்க நேரிட்டதாம்.

“செத்துப்போன’ அந்த அம்மையார் உயிர்பெற்றிருக்கிறார்!

பண்டிதரின் இந்தி மொழி வெறி!

இலங்கையிலும் கோரத் தாண்டவம்

தூதுவராலயக ஊழியர்கள் தலையில் கட்டாய இந்தி

சுற்றறிக்கை மூலம் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

நேருவின் இலங்கை வருகை, ஒரு மகத்தான விளைவை உண்டுபண்ணியிருக்கிறது! இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவராலயகத்தில் பணி புரியும் ஊழியர்களை அவமானப்படுத்தியதுடன் பண்டித நேரு அவர்கள், தூதுவர் மூலமாக அந்த அலுவலகத்தில் பணிபுரியும் தமிழர்கள் அனைவரும் கட்டாயமாக இந்தி கற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டிருக்கிறாராம். அந்த உத்தரவு, ஊழியர்களிடையே பண்டித நேருவின் இந்தி ஏகாதிபத்தியப் போக்கிற்கு எதிரான உணர்ச்சியை ஊட்டியிருக்கிறதாகவும் தெரிகிறது.

கொழும்பு, மே 29—

19—5—57 அன்று நேரு பண்டிதர் இந்தியத் தூதுவர் அலுவலகத்திற்கு வருகை தந்தார். அவரை வரவேற்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றது. வரவேற்பில் உயர்தர அதிகாரிகளும், சிப்பந்திகளும் கலந்து கொண்டனர்.

இந்தியத் தூதுவராலயகத்தில் தென்னாட்டைச் சேர்ந்தவர்களே அதிகமாக பணிபுரிகிறார்கள். ஆகவே, அங்குள்ள தனது ஊழியர்களை இந்தி படிக்குமாறு தூண்ட இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதில்லை. மேலும், அங்கு, இலங்கையைத் தாயகமாகக்கொண்ட அல்லது இலங்கையிலேயே வாழ்நாளைக் கழிக்க வேண்டுமென்று விரும்புகின்ற தென்னாட்டுத் தமிழர்களும் ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு பணியாற்றுவதால், அடிக்கடி மாற்றலாகிற தூதுவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுப்பது சாத்தியப்படாது என்று விட்டுவிட்டனர் போலும்!

அலுவலகத்திற்கு வருகை தந்த பண்டிதருக்கு உயர்தர அதிகாரிகளும், ஏனைய ஊழியர்களும் எழுந்து நின்று மரியாதை செய்து வரவேற்றனர்.

துவக்கத்திலேயே நேரு பண்டிதர் சிப்பந்திகளைப் பார்த்துக் கேட்ட கேள்வி வியப்புக்குரியதாக இருந்தது; 'உங்களில் எத்தனைபேருக்கு இந்தி தெரியும்?'— இப்படி ஒரு கேள்வி எழுப்பினார்.

திடீரென பண்டிதர் இப்படிக் கேட்டதும் அனைவரும் விழித்தனர். ஊழியர்களிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாத நேரு பண்டிதர் தனது இந்தி மொழி வெறிக்கு வெட்கித் தலை குனிந்தவராகக் காணப்பட்டார்.

சில நிமிட நேரம் செய்வதறியாது மெய்மறந்து நின்ற நேரு பண்டிதர் தன்னை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, இந்தி படித்தவர்களை கையை உயர்த்துமாறு கேட்டார். வடநாட்டைச் சேர்ந்த அதிகாரிகளும், சில சில்லரை சிப்பந்திகளும் (இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள்) கையை உயர்த்தினர். பெருவாரியான தென்னாட்டு ஊழியர்கள் கையை உயர்த்தாமல் நின்றதை பார்த்த நேரு பண்டிதர் அதிர்ச்சியடைந்தவராக தூதுவர் குர்தேவியாவின் முகத்தைப் பார்த்தார்!

குர்தேவியா, 'இங்குள்ள ஊழியர்களில் பெரும்பான்மையோர் தென்னாட்டவர்' என்று பண்டிதருக்கு உணர்த்தினார்.

அதன்பின், ஒரு வினாடியும் நேரு பண்டிதர் அங்கு தாமதிக்க விரும்பாதவராய் அலட்சிய மனப்பான்மையோடு அவ்விடத்தினின்றும் திரும்பி, தூதுவரையும் தன்னோடு அழைத்துச் சென்று அவசர அவசரமாக அவருடைய காதில் மறைமுகமாக ஏதோ சொல்லிவைத்துவிட்டுச் சென்றார்.

தென்னாட்டு ஊழியர்கள் அனைவரும் தங்களுக்கு ஏதாவது ஆபத்து வந்தாலும் வரும் என்ற ஐயத்துடன் கலைந்து சென்றனர், மிக்க மனவேதனையோடு!

தென்னாட்டு ஊழியர்களின் வேதனையின் தொடக்கமாக இப்போது, கட்டாயமாக இந்தியை படிக்குமாறு தனது ஊழியர்களுக்கு வற்புறுத்தி இருக்கிறது தூதுவர் அலுவலகம்!

இந்தி பயிலுமாறு சுற்றறிக்கை மூலம் ஊழியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தி வகுப்பு ஒன்றும் தூதுவராலயத்தில் நடத்தப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. நேரு பண்டிதரின் இந்தி வெறி எந்த அளவுக்குச் சென்றிருக்கிறது என்பதை இதன் மூலம் அறியலாம்.

உலக மக்கள் தொகை 270 கோடி!

பிறப்பு—இறப்பு பற்றிய தகவல்கள்

நியூயார்க், மே 27—

உலகத்தின் மக்கள் தொகை 270 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொகை நாள் ஒன்றுக்கு 1,20,000 வீதம் அதிகரித்து வருகிறதாம்.

உலகத்தில் மற்றெல்லாப் பகுதிகளையும்விட ஆசியாவில் தான் மக்கள் தொகை அதிகமாக அதிகரித்து வருகிறதாம்.

உலகத்தில் அதிகமான மக்கள் வாழும் நாடுகள் இந்தியா, சீனா ஆகும்.

சீனாவில் 58,26,03,417 பேர் வாழ்கின்றனராம்!

இந்தியாவில் 35,68,79,394 பேர் வாழ்கின்றனராம்!

உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் 170 குழந்தைகள் பிறக்கின்றனவாம்!

அதே நேரத்தில் 90 பேர் இறக்கின்றனராம்!

உணவுப் பொருள் விலை ஏற்றத்தைத் தடுக்க டில்லி செயல்படும் வேகம்!

புதுடில்லி, மே 28—

உணவுப் பண்டங்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதில், டில்லி சர்க்காருக்கு உள்ள அக்கறையும், அவர்கள் அந்த விஷயத்தில் செயல்படும் வேகமும் டில்லியிலிருந்து தரப்படும் ஒரு செய்தியின் மூலம் தெரியவருகிறது.

விவசாய உற்பத்தி பெருகியிருந்தும் உணவுப் பொருள்களின் விலை ஏறுவதற்கான காரணத்தைக் கண்டறியவும், விலை ஏற்றத்தையும் பதுக்கலையும் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கூறவுமாக டில்லி சர்க்கார் ஒரு உயர்தர அதிகாரம் படைத்த குழுவை நியமிக்கப் போவதாகவும், அந்தக் குழுவில் இடம் பெறப் போகிறவர்களின் பெயர்கள் சீக்கிரமே அறிவிக்கப்படும் என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

ரிசர்வ் பாங்கியின் எதிர்காலம்!

வர்த்தகம், கூட்டுறவுத் துறையில் கொடுக்கல் வாங்கல் முதலியன தற்போது ரிசர்வ் பாங்கியே கவனித்து வருகிறது. இனி இந்த வேலையை மாநில பாங்கிகளுக்கு அளிக்க மத்திய நிதி அமைச்சர் முடிவு செய்துள்ளார்.

எதிர்காலத்தில் ரிசர்வ் பாங்கி இந்திய அரசாங்கத்திற்குப் பணம் கடன், லேவாதேவி சம்பந்தமாக ஆலோசனை கூறும் தலைமை கேந்திரமாக இயங்குமாம்.

கூட்டுறவு நிறுவனங்கள், விவசாயம், சிறு தொழில்கள் ஆகியவற்றிற்குக் கடன் தரும் வேலையை இனி மாநிலப் பாங்கிகளே மேற்கொள்ள வேண்டும் என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் புது வரிகளை விதியுங்கள்!

மாநில சர்க்காருக்கு டில்லி தாக்கீது

ஐதராபாத், மே 28—

"முந்திய வரவு-செலவுத் திட்டத்திலிருந்ததைவிட, இந்த ஆண்டு எல்லா மாநிலங்களும் குறைந்தபட்சம் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமான அளவுக்கு புதிய வரி விதிப்புகள் மூலம் வருவாய் தேடவேண்டும்"

என்று, மாநில சர்க்கார்களுக்கு டில்லி சர்க்கார் 'யோசனை' கூறியுள்ளதாம்.

புதிய வரி விதிப்புகள் விஷயத்தில், விதித்துள்ள அளவு குறைக்கப்படக்கூடாது என்றும், டில்லி சர்க்கார் உறுதியாகத் தெரிவித்துள்ளதாம்!

ஏனெனில், அப்போதுதான் மாநில சர்க்கார்கள், தங்கள் மாநில அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பணம் சேகரிக்க முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார்களாம்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக் கூட்டம்

2—6—57 காலை 9-மணிக்கு
சென்னை கோகலே மன்றத்தில்

தலைவர் : **எஸ். நாராயணன்** M. A.

பேச்சாளர்கள் ;

இரா. நெடுஞ்செழியன்

மு. கருணாநிதி

★

நன்கொடை : ரூ. 1; அணா 8.

—தி. மு. க. மாணவர் கிளை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அமைவதற்கான இடம் முடிவாகவில்லையாம்!

மேட்டூரில் ஒரு அலுமினியம் உருக்குத் தொழிற்சாலையா ?

புதிய அலுமினியம் உருக்கும் தொழிற்சாலைகள் எந்த இடங்களில் ஏற்படுத்தலாம் என்பது பற்றி இன்னும் முடிவாகவில்லையாம்! ஆனால் மேட்டூரில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படலாம் என்று மாநிலங்கள் சபையில் மத்திய தொழில் அமைச்சர் ஷா கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

காச நோயாளிகள், பார்வை இழந்தவர்கள்

இரயில் பிரயாணத்தில் மேலும் சலுகை பெறுவர்

புதுடில்லி, மே 28—

"காச நோயால் அவதிப்படும் நோயாளிகளுக்கு இரயில்வேயில், பிரயாணச் சலுகை தரப்படும்"

என, இரயில்வே மந்திரி செகஜீவன்ராம் அறிவித்திருக்கிறார்.

"அந்த நோயாளிகள், டி. பி. மருத்துவ மனைகளுக்குச் செல்லும்போதும், குணமாகித் திரும்பி வரும்போதும் அந்தச் சலுகை தரப்படும்"

என்று, அவர் மாநிலங்கள் சபையில் கூறியுள்ளார்.

இந்தச் சலுகை அந்தகர்களுக்கும் கிடைக்கும்.

இந்தச் சலுகை ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்ததைவிட சற்று அதிகமானதாகும்.

முன்பு, திட்டம் வெளியிட்ட நேரத்தில் அறிவிக்கப்பட்டிருந்தபடி, க்ஷயரோகிகளும், அந்தகர்களும் பிரயாணத்தின்போது, தன்னுடன் ஒருவரை இலவசமாக அழைத்துச் செல்லலாம் என்பதுதான்.

இப்போது, அவர்கள் தனியாகச் சென்றால், நான்கில் ஒரு பங்கு கட்டணமே பிரயாணத்திற்கென வசூலிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால் இவர்கள், தங்கள் நோய் பற்றி மருத்துவரிடம் அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

இன்புளுயன்சா நோய் பரவாமல் தடுக்க!

மாநிலங்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, மே 28—

இன்புளுயன்சா பரவியுள்ள சென்னை, பம்பாய், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களுக்கு, அவை இந்த நோயைத் தடுப்பதற்காகவும், நோயாளிகளைக் குணப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்கத் தயாராக இருப்பதாக மத்திய சுகாதார மந்திரி கார்மார்கர் தெரிவித்திருக்கிறார்.

இந்த மூன்று மாநிலங்களுக்கும், டில்லி சர்க்காரைச் சேர்ந்த உயர்தர சுகாதார அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

திருமானூர் :
(திருச்சி மாவட்டம்)
31—5—57 மாலை 5 மணிக்கு
பேசுபவர் :
என். வி. நடராசன்
சா. இராமசாமி
வி. காளிதாசன்
பொ. தருமன்

★

கடையநல்லூர்:
மறுமலர்ச்சி மன்றத் திடலில்
31—5—57 இரவு 8 மணிக்கு
தலைவர் :
க. முத்தையா
பேசுபவர் :
க. அன்பழகன் எம். எல். ஏ.,

★

சித்தல்துர்க் வட்டம்—இரியூர் :
(மைசூர் மாநிலம்)
கழக மனையில்
1—6—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
வி. கே. மாறப்பன்
பேசுவோர் :
எம். வேணுகோபால்
ஏ. டி. பிரான்சிஸ்

திருமணம்

31—5—57 காலை 8 மணிக்கு, குருவிக்காம்பை தோழர் வி. சருப்பையன்—தோழியர் சுந்தராம் வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் வி. வைரவத்தேவர் தலைமையில் குருவிக்காம்பை மணமகன் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் எஸ். இராமையன், வி. எஸ். குழந்தை, வி. அருணாசலம், கே. அடைக்கலம், கலியபேசன், பி. வடிவேல், எம். கிருட்டிணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திருத்தம்

27—5—57 சென்னை 'நம்நாடு' இதழில், 26-5-57ல் சென்னையில் நடைபெற்ற புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்ட ஏற்பாடுகளும்—நிகழ்ச்சிகளும் '11-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில்' என்று முதல் பக்கத்திலும், 4-ம் பக்கத்திலும் வந்திருப்பதை '14-வது வட்டத் தி. மு. கழகம்' என திருத்திக்கொள்ள வேண்டுகிறோம். (ஆ.-ர்.)

நீண்ட காலம் வாழ்வது யார்?

ஆண்களா - பெண்களா?

நெதர்லாந்தில் வாழும் ஆண்களும் பெண்களும் சுமார் 70 ஆண்டுகள் வாழ்கின்றனராம்!

உலகத்தின் 12 நாடுகளில் பெண்கள்தான் 70 வயதிற்கும் அதிகமாக வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் ஆண்களைவிட பெண்களே நீண்டகாலம் வாழ்கின்றனராம்!

ஐ. நா. சேகரித்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து இது தெரியவருகிறது.

டில்லியில் 'டெலிவிஷன்' நிலையம் அமைக்கப்படுமாம்!

டில்லியில் ரூ. 5 இலட்சம் செலவில் 'டெலிவிஷன்,' நிலையம் அமைப்பதென மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம். இந்தத் திட்டம் முடிவடைய 18 மாத காலம் பிடிக்குமாம்.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் 'டெலிவிஷன்' திட்டம் விரிவு படுத்தப்படுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.